பொருளடக்கம்


1. முன்னுரை ....03

2. பொது காப்புறுதி நிபந்தனைகளும் உரிமைகளும்

2.1 வதிவிடம், பிரயாணம், தொழில் ....04

2.2 வயதின் நிரூபனம் ....04

2.3 சட்டமும் விளக்கமும் ....04

2.4 முதலீட்டுக் கணக்கு ....04

2.5 விளக்கமளிக்கப்பட்ட முதிர்ச்சிக்கால நன்மைகள்) ....05

2.6 கைதுறப்புப் பெறுமதி ....05

2.7 காப்புறுதிப்பத்திரத்தில் மாற்றங்கள் ....06

2.8 பங்கிலாபங்கள் ....06

2.9 காப்புறுதிப்பத்திரத்தின் மீதான கடன்கள் ....06

2.10 உரிமை மாற்றம ....06

2.11 வாரிசாக நியமனம் ....07

2.12 உரிமைகோரல்கள் கையாளல் செயன்முறை ....07

2.13 தற்கொலை ....08

2.14 பொறுப்புக்களில் இருந்து பூரண விடுவிப்பு ....08

2.15 மாதாந்தக் கட்டணங்கள் இழப்பு ....09

2.16 காணாமற் போனவர்கள் ....09

2.17 இரத்துச் செய்வதற்கான உரிமை ....09

2.18 செல்லுபடித்தன்மை ....09

2.19 வரிவிதிப்பு ....09

2.20 குறைகள்/முறைப்பாடுகள் கையாளல் மற்றும் முரண்பாடு தீர்த்தல் செயன்முறை ....09-10

2.21 முதன்மை நன்மையின் கீழ் உள்ள வரம்புகள் ....11

3. அட்டவணை இல. 3 - வரைவிலக்கணங்கள ....12

3.1 முக்கிய வரையறைகள் ....11-15


Specimen

Specimen

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட இலக்கம் N(PBS)137 பெற்றுக் கொள்ளப்பட்டதும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டதும் தற்சமயம் ஞ12 என்ற பதிவிலக்கத்தையுடையதும் கொழும்பு 3, சென். மைக்கல்ஸ் வீதி, 20 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கொண்டதுமான, யூனியன் அ்யூரன்ஸ் பிஎல்சியுடன் (இனிவரும் பகுதிகளில் கம்பனி என குறிக்கப்படும்) இந்தக் காப்புறுதி பத்திரத்தில் அடங்கிய நிபந்தனைகளின் பிரகாரமான காப்புறுதிக்கு பிரேரணையின் (அல்லது ஏதாவது உப பிரேரணைகள் அல்லது பத்திரங்களின் அடிப்படையில்) காப்புறுதிக்கென காப்புறுதி செய்தவர்களால் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காப்புறுதி செய்தவரால்/செய்தவர்களால் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காப்புறுதி பத்திரத்தின் முதலாவது அட்டவணைக்கமைய தவணைக்கட்டணங்கள் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தால், சம்பவம் ஏதாவது நிகழும்பட்சத்தில் முதலாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட அனுகூலம் வழங்கப்பட வேண்டி வருமானால், அத்தகைய அனுகூலம் கம்பனியால் வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தம் முழுமையான நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே செய்து கொள்ளப்படுகிறது என்பது உணரப்பட வேண்டும். காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரால் பிரகடனப்படுத்தப்படாத அல்லது திரிவுபடுத்திக்கூறும் செயற்பாடுகள் இடம்பெற்றதாக கருதப்படுமிடத்து, காப்புறுதிப்பத்திரத்தை செல்லுபடியற்றது எனவும், பயனற்றது எனவும் கம்பனி பிரகடனம் செய்யும்.

இந்த காப்புறுதிப்பத்திரம் தொடர்பான ஒப்படைப்பு அல்லது நியமனம் பற்றிய எந்தவொரு அறிவித்தலும், ஆயுள் செயல்பட்டு பிரிவு யூனியன் அ்யூரன்ஸ் பிஎல்சி, யூனியன் அ்யூரன்ஸ் நிலையம், இல. 20, சென் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 3 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இதில் அடங்கியுள்ள அல்லது இதனோடு இணைக்கப்பட்ட அட்டவணைகள் பொதுக் காப்புறுதிப்பத்திர நிபந்தனைகள் மற்றும் உரிமைகள், விசேட நிபந்தனைகள், ஏற்பாடுகள், குறிப்புகள் என்பனவும் இந்த ஒப்பந்தத்தின் பகுதியாகவும், உள்ளடக்கப்பட்டதாகவும் கருதப்படும்.

பிரதம செயல்பாட்டு அதிகாரி

தலைமை நிர்வாக அதிகாரி/முதன்மை அதிகாரி

**முக்கிய குறிப்பு**

இது ஒரு சட்டப்பூர்வமாக பிணிப்புடைய ஆவணம் ஆகும். தயவுசெய்து இவ்வாவணத்தை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்கவும். மேலும், இந்த காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் அதிகபட்ச அனுகூலங்களைப் பெற வேண்டியிருக்கும் போது கட்டுப்பணம் செலுத்தப்படுவதை உறுதிசெய்யவும்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவால் (IRCSL) உரிமம் பெற்றுள்ளது.

Union Assurance PLC (PQ12) No. 20, St. Michael's Road, Colombo 03, Sri Lanka
Customer Hotline: 1330 | General 0112 990 990
Fax (+94)112 438 165 | Email: info@unionassurance.com | Website: www.unionassurance.com
Facebook: www.facebook.com/unionassurance | Lifeportal: portal.unionassurance.com

**அட்டவணை இல.2**

## 2. பொது காப்புறுதி நிபந்தனைகளும் உரிமைகளும்

### 2.1 வதிவிடம், பிரயாணம், தொழில்

வேறு எவ்வகையிலும் குறித்துரைக்கப்படாதவிடத்து, பிரயாணம், வதிவிடம், தொழில் சம்பந்தமான சகல கட்டுப்பாடுகளுக்கும் இந்த காப்புறுதிப்பத்திரம் அப்பாற்பட்டதாகும்.

### 2.2 வயதின் நிரூபனம்

இந்த காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் எந்தவொரு கொடுப்பனவுகளையும் செய்வதற்க்கு முன்னர் ஆயுள் காப்புறுதி செய்தவரின் வயதை உறுதி செய்யும் படி கோரும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது. காப்புறுதி செய்தவரின் வயது, கவனக்குறைவாக, தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தால், அதன் அடிப்படையில் மாத்திரம் காப்புறுதிப்பத்திரம் பெறுமதியற்றதாக கருதப்படமாட்டாது. ஆனால், மாதாந்தக் கட்டணம் மற்றும் காப்புறுதிப்பத்திரத்தின் கீழான அனுகூலங்கள் தொடர்பில் பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும்.

### 2.3 சட்டமும் விளக்கமும்

(i) இந்த காப்புறுதிப்பத்திரம் இலங்கையின் சட்ட விதிமுறைகளுக்கமைய அமைந்திருக்கும்.

(ii) ஆயுள் காப்புறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள நபரின் பிரத்தியேக பிரதிநிதிகளை உள்ளடக்கும் போது ஒருமைகள் பன்மைகளை குறிக்கும் வகையில் அமைந்திருக்கும். எதிர்மாறாகவும் பொருந்தும்.

(iii) ஆண்பாலை குறிக்கும் எந்தவொரு குறிப்புரையும் பெண்பாலுக்கும் பொருந்தும், எதிர்மாறாகவும் இது அமைந்திருக்கும்.

(iv) காப்புறுதி பத்திரத்துக்கும் அதன் ஆங்கிலம், சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுமானால், சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட ஆவணம் இறுதியானதாக கருதப்படும்.

(v) இந்த காப்புறுதித்திட்டத்தின் கீழான சகல தவணைக்கட்டணங்கள் மற்றும் அனுகூலங்கள் போன்றன இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

(vi) உங்கள் உரிமைகள் மற்றும் நீங்கள் சேகரித்த தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள, தயவுசெய்து எங்கள் தனியுரிமைக் கொள்கையைப் பார்வையிடவும் www. unionassurance. com/privacy.policy

### 2.4 முதலீட்டுக் கணக்கு

இக் காப்புறுதியின் கீழ் வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரங்கள் சம்பந்தமாக தனிநபர் முதலீட்டுக் கணக்கை நிறுவனம் கட்டாயமாகப் பேணி வரும்.

(i) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பிரிவில் விபரிக்கப்பட்ட முதன்மை அனுகூலங்களுக்கென செலுத்தப்பட்ட மாதாந்த கட்டணங்கள்ரூபவ் அவற்றுக்குரிய காப்புறுதிப்பத்திர நிபந்தனைகள் மற்றும் வருடம் என்பனவற்றின் அடிப்படையில்ரூபவ் கீழே தரப்பட்ட ஒதுக்கீட்டு விகிதத்தின் பிரகாரம் செலுத்தப்பட்ட உண்மையான திகதியில் முதலீட்டுக் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படும்.

Specimen

| காப்புறுதி காலப்பகுதி (வருடங்களில்) | தனிக்கட்டுபணம் ரூபா.100,000/- முதல்ரூபா. 249,999/- வரை | தனிக்கட்டுபணம் ரூபா.249,999/- முதல்ரூபா.499,999/- வரை | தனிக்கட்டுபணம் ரூபா.500,000/- மற்றும் அதற்கு மேல் |
|---|---|---|---|
| 05 வரை 19 | 94% | 95% | 96% |
| 20 வரை 30 | 95% | 96% | 97% |

(ii) ஒவ்வொரு வருடத்தின் தொடக்கத்திலும் குறிப்பிட்ட அந்த வருடத்தில் நிதியுடன் சேர்க்கவென இடைக்கால பங்கிலாப விகிதத்தினை நிறுவனம் தீர்மானிக்கும். வருடத்தின் இறுதியில் அந்த வருடத்திற்கான உண்மையான பங்கிலாப விகிதம் நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படவிருக்கிறது. வருட ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்ட இடைக்கால விகிதத்தை குறிப்பட்ட வருடத்தின் ஆகக்குறைந்த பங்கிலாப விகிதமென நிறுவனம் உத்தரவாதமளிக்கும்.

(iii) முதலீட்டுக் கணக்கில் இருந்து கீழ்காணும் கட்டணங்கள் கழிக்கப்படவிருக்கின்றன:

(அ) முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியின் பிரகாரமான அடிப்படை நன்மைகள் என்பதின் கீழ் வழங்கப்பட்ட ஆயுட்காப்புறுதி செலவீனத்திற்கான மாதாந்த இடர் கட்டணம், இடரின் பரிணாமத்திற்கு அமையவே கணிக்கப்படுகிறது. அதாவது, ஆயுள் காப்பீடு பெற்றவரின் தற்போதைய பிறந்த நாளை அண்மித்த வயதிற்கு +5 ஆண்டுகள் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

(ஆ) 5 முதல் 14 ஆண்டுகள் வரை காலத்திற்கு வருடத்திற்கு 1.2% மற்றும் 15 முதல் 30 ஆண்டுகள் வரை காலத்திற்கு வருடத்திற்கு 1% என்ற மாதாந்திர நிதி மேலாண்மை கட்டணம் (குரனெ ஆயயெபநஅநவெ ஊாயசபந - குஆஊ) முதலீட்டு கணக்கில் விதிக்கப்படுகிறது. இது முதலீட்டுகள், நிர்வாகம், பெறுதல் மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் பிற சேவைகளை கையாளும் செலவுகளை மூடுவதற்காகக் கணக்கிடப்படுகிறது.

வாழ்க்கை காப்பீட்டின் செலவுக் கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் மரண விகிதங்களைப் பார்க்க Annexure II-ஐப் பார்க்கவும்.

### 2.5 விளக்கமளிக்கப்பட்ட முதிர்ச்சிக்கால நன்மைகள்

முதலாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் தெரிவிக்கப்பட்ட விளக்கமளிக்கப்பட்ட முதிர்ச்சிக்கால நன்மைகள் சம்பந்தப்பட்ட பங்குலாப விகிதங்களின் அடிப்படையிலான விளக்கமளிக்கப்பட்ட திரட்டிய நிதியாகும். அடிப்படை நன்மைகளின் முடிவு தினத்திலன்று கிடைக்கும் முதிர்ச்சி நன்மைகள் பற்றிய முன்னறிவித்தலை வழங்கும் வகையில் இது அமைந்துள்ளது. மாதாந்தக் கட்டணக் கொடுப்பனவுகளின் திகதிகளில் பிரகடனம் செய்யப்பட்ட உண்மையான பங்குலாபங்களின் அடிப்படையில் நிறுவனத்தினால் வழங்கப்படும் உண்மையான முதிர்ச்சி பெறுமதி தங்கியிருக்கும்.

### 2.6 கைதுறப்புப் பெறுமதி

காப்புறுதிப்பத்திரம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று (03) வருடகாலம் பூர்த்தியடைந்த பின்னரும் மூன்று வருடகால மாதாந்தக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்னரும் காப்புறுதிப்பத்திரம் கைதுறப்பு பெறுமதியை பெற்றுக்கொள்ளும். காப்புறுதிப்பத்திரத்தின் முதலாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட எந்தவொரு மேலதிக நன்மைகளும், கைதுறப்புப் பெறுமதியைப் பெற்றுத்தரமாட்டது.

நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும் கைதுறப்புப் பெறுமதியிலிருந்து காப்புறுதிப்பத்திரம் சம்பந்தமாக நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய எத்தகைய கடன் தொகையும் கழிக்கப்பட்ட தொகை, காப்புறுதிப்பத்திரப் பெறுமதிகளை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்களினால் நிறுவனத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதை அடுத்து பெற்றுக்கொள்ளப்படலாம். காப்புறுதிப்பத்திரம் கைதுறக்கப்பட்டதன் பின்னர், செலுத்தப்படும் மாதாந்தக் கட்டணங்கள் நிறுவனத்தின் எத்தகைய சட்டக்கட்டுப்பாட்டையும் உருவாக்க மாட்டாது.

Specimen

நிகர கைதுறப்பு பெறுமதி = கைதுறப்பு செய்யும் தினத்தில் முதலீட்டு கணக்கு மதிப்பு - கைதுறப்பு கட்டணம் - கடன் நிலுவை (பொருந்தினால்)

கைதுறப்பு கட்டணம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது

கைதுறப்பு கட்டணம = கைதுறப்பு செய்யும் தினத்தில் முதலீட்டு கணக்கு மதிப்பு - கைதுறப்பு கட்டணம்%

கைதுறப்பு கட்டணங்களுக்கு இணைப்பு 1 ஐ பார்க்கவும்.

**2.7 காப்புறுதிப்பத்திரத்தில் மாற்றங்கள்**

காப்புறுதிப்பத்திரத்தில் மாற்றங்கள் எற்படுத்தப்பட வேண்டுமென்ற காப்புறுதிப்பத்திர உரிமையாளரின் கோரிக்கையை, அவசியம் எனக்கருதப்படும் நிபந்தனைகளினதும், வரையறைகளினதும் அடிப்படையில் நிறுவனம் அதன் சொந்த நிர்ணயத்தின் அடிப்படையில் ஆராயும்.

நிறுவனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரால் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்ட காப்புறுதிப்பத்திர புறக்குறிப்பு இல்லாமல், இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் சிறப்புரிமைகளும் நிபந்தனைகளும் மாற்றப்படவோ விட்டுக்கொடுக்கப்படவோமாட்டாது.

**2.8 பங்கிலாபங்கள்**

ஓவ்வொரு வருடமும் டிசம்பர் 31 ஆம் திகதி பங்கிலாபத்தொகை மூலதனக் கணக்கில் சேர்க்கப்படும். நிறுவனத்தின் காப்புறுதி நிபுணரினால் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் ஷமூலதனக் கணக்கில்' சேர்க்கக்கூடிய நிறுவனத்தின் ஆயுள்காப்புறுதி நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் பகிர்ந்தளிக்கக்கூடிய மூலதன வருமானத்தின் நூறு சதவிகிதம் (100%) பங்கிலாபமாகும்.

**2.9 காப்புறுதிப்பத்திரத்தின் மீதான கடன்கள்**

ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படும் நிலையில், காப்புறுதியின் கைதுறப்புப் பெறுமதியில் தொண்ணூறு சதவீதத்தை (90%) அதிகரிக்காத வகையில், நிறுவனத்தினால் காலாகாலத்தில் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதங்களுக்கான நியதி நிபந்தனைகளின் பிராகாரம் வழங்கப்படும். கடன் வழங்கப்படும் போது நிறுவனத்தினால் பேணப்படும் நியம கடன் உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த கடன்கள் அமைந்திருக்கும்.

காபப்பு றுதி அமுலிலுள்ள காலப்பகுதியில் கடன் தொகையை காப்புறுதிதாரர் மீளச் செலுத்த வேண்டும், அவ்வாறு செலுத்தத் தவறும் நிலையில், காப்புறுதி திட்டத்தின் முதிர்வு தொகையிலிருந்து நிலுவையிலுள்ள வட்டி மற்றும் கடன் முதல் தொகை போன்றன அறவிடப்படும். தவணைக்கட்டணங்கள் அல்லது.'.மற்றும் கடன் மீளச் செலுத்துகைகள் போன்றன தவறவிடப்பட்டிருந்ததன் காரணமாக நிலுவையிலுள்ள கடன் தொகை கைதுறப்புப் பெறுமதியை விட அதிகமாக காணப்பட்டால், காப்புறுதி முன்னறிவித்தல்கள் எதுவுமின்றி இரத்துச் செய்யப்படும் என்பதுடன், நிறுவனம் நிலுவையிலுள்ள கடன் மற்றும் வட்டி தொகையை காப்புறுதிதாரரிடமிருந்து அறவிடும்.

**2.10 உரிமை மாற்றம்**

உரிமை மாற்றம் தொடர்பான எழுத்துமூல அறிவித்தல் பெற்றுக் கொள்ளப்பட்டு பதிவு செய்யப்படாதவிடத்து இந்த காப்புறுதிப் பத்திரத்தின் உரிமை மாற்றம், நிறுவனத்தை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. உரிமை மாற்றம் சம்பந்தமான எழுத்துமூல அறிவித்தல் பெற்றுக் கொள்ளப்பட்டதும், அத்தகைய உரிமை மாற்றத்தை பதிவு செய்ய முன்னர், நிறுவனத்தின் மனநிறைவுக்கென பார்வையிடுவதற்கு சகல முன் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு கோரும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது. உரிமை மாற்றத்தை பதிவு செய்யுமிடத்து, அதன் செல்லுபடியாகும் தன்மை அல்லது சட்டப்பயன்பாடு சம்பந்தமாக எத்தகைய பொறுப்பையும் நிறுவனம் ஏற்றுக் கொள்ளாத அதேசமயத்தில், அதன் உள்ளடக்கம் பற்றி எந்தவித கருத்தையும் வெளியிடமாட்டாது.

Specimen

### 2.11 வாரிசாக நியமனம்

(i) காப்புறுதிப்பத்திரம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் நிறுவனத்திற்கு திருப்தியளிக்கும் வகையில் எழுத்துமூலமான அறிவித்தலை விடுப்பதன் மூலம் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் வாரிசை/வாரிசுகளை நியமிக்க அல்லது உரியமுறையில் நியமிக்கப்பட்ட வாரிசை/வாரிசுகளை காப்புறுதியாளர் மாற்ற முடியும்.

(ii) எந்தவொரு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் உட்பட்ட, வகையில் காப்புறுதி செய்தவரிடமிருந்து பெற்ற எழுத்து மூலமான கோரிக்கையை நிறுவனத்தினால் பதிவு செய்யப்பட்டால் மாத்திரமே வாரிசு மாற்றம் செல்லுபடியாகும்.

(iii) வாரிசு ஒருவர் மாற்றப்பட்டால் எழுத்துமூல அறிவித்தலின் திகதியில் இருந்தே அந்த மாற்றம் நிகழ்ந்ததாக கருதப்படும். வாரிசாக நியமிக்கப்பட்டவர் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் தொகைகளை நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டதும், இந்தப் பத்திரத்தின் பிரகாரமான பொறுப்புக்களை நிறுவனம் செல்லுபடியான முறையில் பூர்த்தி செய்ததாக கருதப்படும். பணம் பெற்றமை சம்பந்தமாக வாரிசாக நியமிக்கப்பட்டவரின் பற்றுச்சீட்டு, கொடுப்பனவு இடம்பெற்றதற்கான இறுதி நிரூபணமாகும்.

(iv) காப்புறுதி செய்தவர் இறக்கும் சமயத்தில் வாரிசு எவரும் இல்லாவிட்டால், வழங்கப்பட வேண்டிய தொகை காப்புறுதி செய்தவருக்கு அல்லது அவரது மரணச்சொத்துக்கு வழங்கப்படும்.

(v) இந்த காப்புறுதியின் எந்த ஒரு உரிமை மாற்றமும் ஒரு நியமனத்தின் தற்போதைய பின்னுரித்தாளரின் நியமனத்தை ரத்து செய்யும் விளைவைக் கொண்டிருக்கும். மேற்கண்ட பாலிசியை மறு ஒதுக்கீடு செய்த பிறகு, காப்புறுதிதார் நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பு கொடுக்க வேண்டும், புதிய நியமனத்தை நியமிக்க வேண்டும் அல்லது முந்தைய நியமனத்தை மீண்டும் நியமிக்க வேண்டும்.

(vi) காப்புறுதி செய்தவர் இறப்பதன் காரணமாக ஏற்படும் நன்மைகளின் கொடுப்பனவுகளுக்கு மட்டுமே வாரிசின் நியமனம் கருத்திற்கொள்ளப்படும்.

### 2.12 உரிமைகோரல்கள் கையாளல் செயன்முறை

உங்களின் உரிமைகோரல் தொடர்பான உடன உதவி மற்றும் வேறேதும் கோரிக்கைகளுக்கு, பின்வரும் நாளிகைகளினூடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

- அழைப்பு நிலைய பொது இலக்கம்: 0112 990 990
- ஹொட்லைன்: 1330 (இயங்கும் நேரம்: 24X7)
- நிறுவன மின்னஞ்சல்: info@unionassurance.com

உரிமைகோரல் செயன்முறையின் ஒரு அங்கமாக, உங்கள் உரிமைகோரலின் மதிப்பீட்டிற்காக பின்வரும் நியம ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிப்பதை உறுதிசெய்யவும். உரிமைகோரல் வகையின் அடிப்படையில் தேவையான நியம ஆவணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு உரிமைகோரலும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன், உரிமை கோரலுடன் தொடர்புடைய இதர அல்லது மேலதிக ஆவணங்களை உரிமைகோருபவரிடமிருந்து கம்பனியால்பிஎல்சியின் உரிமைகோரல் பிரிவு கோரும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். மேலும், கோரப்பட்ட அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் உரிய நேரத்தில் சமர்ப்பிப்பது உரிமைகோரல் மதிப்பீட்டு செயல்முறைக்கு முக்கியமானது என்பதையும் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்:

- உயிரிழப்புசார் உரிமைகோரல்கள்
  - உரிமைகோரல் படிவம்
  - மரணச் சான்றிதழ்
  - காப்புறுதி ஆவணம் / காப்புறுதி சான்றிதழ்
  - பின்னுருத்தாளி / களின் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ்
  - பின்னுருத்தாளி வாழ்க்கைத் துணை எனில் திருமண சான்றிதழ்
  - மரண விசாரணை அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை (அவசியமாயின்)

Specimen

குறிப்பிட்ட காப்புறுதி நிபந்தனைகளுக்கு, காப்புறுதி ஆவணத்தின் பொருத்தமான நிபந்தனைகளை பார்க்கவும். உரிமைகோரலின் அளவு, வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய ஆவணங்கள் மற்றும் உரிமைகோருபவரின் அடையாளம் உறுதிப்படுத்தல் போன்றன அடங்கலாக சகல ஆவணங்களும் பூர்த்தி செய்யப்பட்டதிலிருந்து 14 நாட்களினுள் உரிமைகோரல்கள் செலுத்தப்படும்.

**2.13 தற்கொலை**

காப்புறுதிப்பத்திரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி அல்லது பத்திரத்தின் மீளாய்வு:புனரமைப்பு திகதி, இவற்றில் எது பிந்தியதோ அந்தத் திகதியில் இருந்து பன்னிரண்டு (12) மாதங்களுக்குள்ளாக காப்புறுதி செய்தவர் சித்த சுவாதீனத்தோடு அல்லது சித்த சுவாதீனமற்ற நிலையில் தற்கொலை செய்து கொண்டால், நிதி தொடர்பான விடயங்களில் நல்லெண்ண அடிப்படையில் மூன்றாம் தரப்பினரால் பெறுமதி அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நலன்கள் மற்றும் மரணம் நிகழ்ந்த திகதிக்கு முன்னராக அத்தகைய நலன்கள் நிறுவனத்தினால் எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான பதில் வழங்கப்பட்டிருந்தாலேயொழிய ஏனைய சூழ்நிலையில் காப்புறுதி பத்திரம் செல்லுபடியற்றதாகும்.

**2.14 பொறுப்புக்களில் இருந்து பூரண விடுவிப்பு**

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் எத்தகைய கொடுப்பனவுகளையும் செய்வதற்கு நிறுவனம் பொறுப்புடையதாகாது.

(i) எந்தவொரு யுத்தம் மற்றும் யுத்த நிலைமையோடு ஒப்பிடக்கூடிய தாக்குதல், பயங்கரவாத நடவடிக்கை, ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரியின் நடவடிக்கை, கிளர்ச்சி, யுத்த பிரகடனம் செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் நிகழும் எந்தவொரு யுத்தம், உள்நாட்டு போர், கலகம், அதிகாரிகளுக்கு எதிர்ப்பு, புரட்சி, அரசாங்க - உள்ளூராட்சி மற்றும் அதிகார சபையின் உத்தரவின் பிரகாரமான பறிமுதல் அல்லது தேசியமயப்படுத்தல், வன்செயல்களின் அடிப்படையில் உண்மையான அரசாங்கம் ஒன்றை பதவி நீக்கம் செய்யவென எந்தவொரு அமைப்பின் பெயரால் அல்லது தொடர்பால் நபர் ஒருவர் மேற்கொள்ளும் எத்தகைய நடவடிக்கையும் அல்லது,

(ii) யுத்தம், கிளர்ச்சி, கலகம், அதிகாரிகளுக்கு எதிர்ப்பு, பயங்கரவாத நடவடிக்கை என்பனவற்றை அடக்கவென ஆயுதப்படை அல்லது பொலிஸைச் சேர்ந்த எந்தவொரு அங்கத்தவராலும் மேற்கொள்ளப்பட்ட எத்தகைய நடவடிக்கை காரணமாகவும் அல்லது அவ்வாறான யுத்தம், கிளர்ச்சி, கலகம், புரட்சி, அதிகாரிகளுக்கு எதிர்ப்பு, பயங்கரவாத நடவடிக்கை என்பனவற்றில் எந்தவொரு சம்பவத்தோடும் காப்புறுதி செய்தவர் நேரடியாகவோ அல்லது நேரடியற்ற வகையிலோ தொடர்பு கொண்டிருந்ததை அடுத்து அவரை கைது செய்யவென மேற்கொள்ளும் நடவடிக்கையின் போது முறைப்பாடு செய்யப்பட்ட மரணம் அல்லது விபத்து சம்பவித்திருந்தால் அல்லது ஏற்பட்டிருந்தால், அல்லது

(iii) இந்தப் காப்புறுதிப்பத்திரத்தின் கீழான பிரேரனை, பிரகடனம், ஏனைய ஆவணங்கள், இந்தக் காப்புறுதிப்பத்திரம் சம்பந்தமான அல்லது தேவைப்படும் சகல முக்கியமான விடயங்களையும் வெளிப்படையாக அறிவிக்க ஆயுள் காப்புறுதி செய்தவர் தவறிய அல்லது அலட்சியப்படுத்திய நிலையில் அல்லது

(iv) வஞ்சகமாக அல்லது அநீதியாக இந்தக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அல்லது

(v) காப்பீடு பெற்றவர் எந்தவொரு சட்டத்தையும் மீறியிருந்தால் மற்றும்/அல்லது காப்புறுதி செய்தவரின் சட்டத்துக்கு முரணான எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெற்றிருத்தால் அல்லது

(vi) காப்பீடு பெற்றவர் எந்தவொரு சட்டத்தையும் மீறியிருந்தால் மற்றும்/அல்லது காப்புறுதி செய்தவர் குற்றச்செயலுடன் தொடர்புகொண்டுள்ளதை அடுத்து கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அல்லது ஆத்திரமூட்டப்பட்டதையடுத்து இடம்பெற்ற தாக்குதலில் ஏற்பட்ட காயங்களினால். இந்த உட்பிரிவின் கீழான எத்தகைய பொறுப்புகளினதும் உரிமைகளை நிறுவனம் கைவிடுமானால், முறைப்பாடு செய்யப்பட்ட மரணம் அல்லது விபத்து மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு செயற்பாட்டலும் அல்லது சம்பவத்தினாலும் ஏற்படவில்லை என்பதை நிரூபிக்கும் பொறுப்பு இந்தப்பத்திரத்தின் கீழான நன்மைகளை கோருபவரை அல்லது கோருபவர்களைச் சார்ந்ததாகும்.

Specimen

**2.15 மாதாந்தக் கட்டணங்கள் இழப்பு**

பிரேரணை அல்லது பிரகடனம் என்பவற்றில் அல்லது ஒப்பந்தத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட வேறு ஏதாவது ஆவணங்களில் விபரங்களை வெளியிடாமை அல்லது உண்மையற்ற தவறான உறுதிமொழிகள் இடம்பெற்றிருந்ததன் அடிப்படையில், இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் பிரகாரமான பொறுப்புக்கள் தள்ளுபடி செய்யப்படுமிடத்து, இந்தக் காப்புறுதி செல்லுபடியற்றதாக கருதப்பட்டு செலுத்தப்படாத சகல மாதாந்தக் கட்டணங்களும் இதன் நிபந்தனைகளுக்கு அமைய பறிமுதல் செய்யப்படும்.

**2.16 காணாமற் போனவர்கள்**

காப்புறுதி செய்தவர் உயிருடன் இருந்தால் அவரிடம் இருந்து வழமையான தகவல்களைப் பெற்றுக்கொள்பவர்கள், அவரைப்பற்றி ஒரு (01) வருடகாலத்திற்கு எதுவும் அறிந்திராத சூழ்நிலையில் காப்புறுதி செய்தவரின் மரணம் உறுதிப்படுத்தப்படுமானால், அவரிடமிருந்து எத்தகைய தகவல்களும் கிடைக்காத தருணத்திலிருந்து கணக்கிடப்பட்ட ஏழு (07) வருடங்கள் முடியும் வரை இந்தக் காப்புறுதியின் கீழ் எந்தவொரு தொகையும் வழங்கப்படமாட்டது.

**2.17 இரத்துச் செய்வதற்கான உரிமை**

முதலாவது அட்டவணையின் முதலாவது பகுதியில் தெரிவிக்கப்படதன் பிரகாரம், காப்புறுதிப்பத்திரத்தின். திகதியில் இருந்து இருபத்தி ஒரு (21) நாட்களுக்குள் (Cooling-off period/free-look period) காப்புறுதிப்பத்திர ஆவணத்தை நிறுவனத்திற்கு.

திருப்பி அனுப்புவதன் மூலம் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தை நீக்க முடியும். அத்தகைய நீக்கம் இடம்பெறுமானால் காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவரால் வைத்திய பரிசோதனை மற்றும் ஆய்வுகூடப் பரிசோதனை என்பனவற்றுக்கான செலவீனங்களை, மொத்த மாதாந்தக் கொடுப்பனவில் இருந்து கழித்த பின்னர் எஞ்சிய தொகையை, நிறுவனம் மீளளிக்கும்.

காப்புறுதிப்பத்திரத்தின் காப்புறுதிக்கான ரசீது திகதியில் இருந்து இருபத்தி ஒரு (21) நாட்களின் பின்னர் காப்புறுதிப்பத்திரம் நீக்கப்பட்டால், கைதுறப்புப் பெறுமதியைத் தவிர வேறு எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

**2.18 செல்லுபடித்தன்மை**

காப்புறுதி ஆரம்பிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு அல்லது மீளமைக்கப்பட்டு இவற்றில் எது பிந்தியதோ, அதிலிருந்து இரண்டு (02) வருடங்கள் செயலில் இருந்த பின்னர், கம்பனியுடன் காப்புறுதி செய்வதற்கு போலியான ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை உறுதி செய்ய எவ்விதமான ஆதாரங்களும் இல்லாதபட்சத்தில் இந்த காப்புறுதிப்பத்திரத்தின் செல்லுபடித்தன்மை பற்றி கம்பனி எவ்விதமான சிக்கல்களையும் ஏற்படுத்தாது.

**2.19 வரிவிதிப்பு**

நிறுவனமானது ஆயுள்காப்புறுதியாளர், பின்னுருத்தாளர் அல்லது உரிமைக்கோரிக்கையினைப் பெற்றுக்கொள்பவரின் மீது ஏதேனும் சட்டம், ஆணை, ஒழுங்கு அல்லது வேறுஏதேனும் வகையில் அமுல்படுத்தக்கூடிய வரி மற்றும் வேறு கொடுப்பனவுகளுக்காக முதலீட்டுக்கணக்கு மற்றும் ஆயுள் காப்புறுதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய நன்மைகள் எவற்றையேனும் குறைப்பதனை உசிதமானதாக நிறுவனம் கருதுமாயின் அதனை குறைப்பதற்கான அதிகாரத்தினை கொண்டுள்ளது.

**2.20 குறைகள் / முறைப்பாடுகள் கையாளல் மற்றும் முரண்பாடு தீர்த்தல் செயன்முறை**

முறைப்பாடு கையாளல் கொள்கையினூடாக, கம்பனியால் வழங்கப்படும் சேவைகள் அல்லது காப்புறுதித் திட்டங்களுடன் தொடர்புடைய ஏதேனும் குறைகளை கையாள்வது பற்றிய விதிமுறைகள் வழங்கப்படுகின்றன. முறைப்பாடுகளை முறையாகவும் வினைத்திறனான வகையிலும் தீர்க்கப்படுவதற்கான கட்டமைக்கப்பட்ட வழிமுறையை இந்தக் கொள்கை உறுதி செய்கின்றது.

Specimen

**(i)** முறைப்பாடுகளை பதிவு செய்யும் முறைகள்

- வாடிக்கையாளர் சேவை ஹொட்லைன்: வாடிக்கையாளர் சேவை ஹொட்லைன் இலக்கமான 0112 990 990 அல்லது குறுகிய இலக்கம் 1330 உடன் தொடர்பு கொள்ளல்.
- எழுத்துமூல முறைப்பாடு: கம்பனி தலைமையகத்தில் எழுத்து மூல முறைப்பாட்டை சமர்ப்பித்தல்.
- நேரடி விஜயம்: கம்பனி தலைமையகம் அல்லது எந்தவொரு கிளைக்கும் விஜயம் செய்தல்.
- கூட்டாண்மை WhatsApp இல.: கூட்டாண்மை WhatsApp இலக்கமான 0771 330 000 ஊடாக எழுத்து மூல முறைப்பாட்டை அனுப்பல்.
- கூட்டாண்மை மின்னஞ்சல்: info@unionassurance.com க்கு எழுத்து மூல முறைப்பாட்டை மின்னஞ்சல் வாயிலாக அனுப்பல்.

முறைப்பாட்டை பதிவு செய்ததன் பின்னர், கணனி கட்டமைப்பினால் தயாரிக்கப்பட்ட முறைப்பாட்டு பதிவு இலக்கத்துடனான பதிவை ஏற்றுக் கொண்டமையை உறுதி செய்து 3 வேலை நாட்களுக்குள் காப்புறுதிதாரரக்கு பதில் அனுப்பப்படும். பிணக்கு தீர்க்கும் செயன்முறையின் போது அவர்களின் முறைப்பாடுகள் பற்றி பின்தொடர்வதற்கு இந்த பதிவு இலக்கம் உதவியாக அமையும். கம்பனி முறைப்பாடு கையாளல் செயன்முறை பற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு www.unionassurance.com எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.

**(ii)** தீர்வு வழங்கும் காலப் பகுதி:

முறைப்பாடுகள் சாதாரணமாக முறைப்பாடு கிடைத்து 14 வேலை நாட்களுக்குள் தீர்க்கப்படும். மேலதிக கால அவகாசம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில், காப்புறுதிதாரருக்கு அதற்கான காரணங்கள் வழங்கப்பட்டு, தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காலம் பற்றி அறிவிக்கப்படும்.

**(iii)** முரண்பாடு தீர்த்தல்:

ஆரம்ப தீர்ப்பு தொடர்பில் காப்புறுதிதாரரக்கு திருப்தி கொள்ளாவிடின், கம்பனியால் பிஎல்சியிடமிருந்து தீர்ப்பு அல்லது பதில் கிடைத்து 4 வாரங்களினுள் மாற்று முரண் தீர்ப்பு (ADR) பொறிமுறையாக நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு மேன்முறையீடாக வழங்கப்படலாம். கம்பனியால் தீர்வு / பதில் கிடைத்து, 4 வாரங்களுக்குள் காப்புறுதிதாரரக்கு பதில் எதுவும் கிடைக்காத சந்தர்ப்பத்தில், காப்புறுதிதாரரக்கு கிடைக்க வேண்டியிருக்கும் முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளுடன் தொடர்புடைய சகல விடயங்களும் மூடப்படும்.

கம்பனியால் வழங்கிய தீர்வுடன் உடன்படாத சந்தர்ப்பத்தில், காப்பீடு செய்யப்பட்டவரால் குறித்த முறைப்பாட்டை காப்புறுதி குறைகேள் அதிகாரி அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அல்லது இலங்கையினுள் இயங்கும் ஏதேனும் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்கான உரிமையை காப்புறுதிதாரர் கொண்டிருப்பார். இதனூடாக, ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்களை பின்பற்றி பக்கசார்பற்ற தீர்வுக்கு வருவது உறுதி செய்யப்படும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) விபரங்கள்.

- விசாரணைகள் பணிப்பாளர்<br>இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு<br>11 ஆம் மாடி, கிழக்கு டவர், உலக வர்த்தக மையம், கொழும்பு 01<br>தொலைபேசி : 0112396184-9 / 0112335167<br>மின்னஞ்சல்: investigation@ircsl.gov.lk / info@ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரியின் விபரங்கள்<br>இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரி<br>இல 01, பெதஸ்தா இடம், மிலகிரிய, பம்பலப்பிட்டி.<br>தொலைபேசி : 0114528671, 0112505542<br>மின்னஞ்சல் : info@insuranceombudsman.lk<br>இணையம் : www.insuranceombudsman.lk

Specimen

### 2.21 முதன்மை நன்மையின் கீழ் உள்ள வரம்புகள்

முதன்மை நலனுக்கான தகுதிக்கு பின்வரும் வரம்புகள் பொருந்தும்.

| வகை | குறைந்தபட்சம் (ஆண்டுகள்) | அதிகபட்சம் (ஆண்டுகள்) |
|---|---|---|
| வயது | 18 | 65 |
| காப்பீட்டு காலம் | 05 | 40 |

Specimen

**அட்டவணை இல. 3**

**03. இந்தக் காப்புறுதிக்கு பொருத்தமான வரைவிலக்கணங்கள்**

**3.1 முக்கிய வரையறைகள்**

**“மாற்றங்கள்”**

காப்புறுதிக்கான மேலதிக அல்லது மாற்று ஏற்பாடுகள் பற்றிய எந்தவொரு விவரமும், நிறுவனத்தினால் கைச்சாத்திடப்பட்டு காப்புறுதி செய்தவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மாத்திரமே மாற்றங்கள் நடைமுறைக்கு வரும். காப்புறுதியின் நிபந்தனைகள், மட்டுப்படுத்தல்கள், தவிர்ப்புக்கள் என்பனவற்றிற்கு உட்பட்டு திருத்தங்கள் அமையும்.

**“விண்ணப்பதாரர்”**

விண்ணப்பத்தை நிரப்பி கைச்சாத்திடுவதன் மூலம் காப்புறுதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிப்பவர்.

**“விண்ணப்பப்படிவம்”**

காப்புறுதிப்பத்திரத்தின் கீழான காப்புறுதித் தொகையை பெறவென விண்ணப்பிக்கும் படிவம்.

**“அடிப்படை காப்பீட்டு தொகை”**
என்பது காப்பீட்டு திட்டத்தில் உயிர் காப்பீட்டாளரின் மரணத்தின் போது வழங்கப்படும் குறைந்தபட்ச நன்மையாகும்.

**“நன்மைகள்”**

காப்புறுதி நிறுவனத்துடனான காப்புறுதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் காப்புறுதி செய்தவர்கள் பெறுவதற்கு உரித்துடைய சேவையின் எல்லை அல்லது அளவு.

**“கோருநர்”**
காப்பீட்டு திட்டத்தின் உரிமையாளர், நியமிக்கப்பட்டவர், ஒப்படைக்கப்பட்டவர் அல்லது சட்டப்படி உரிமை கொண்ட மற்ற எந்த நபரானாலும் (உதாரணமாக, மரணமடைந்த காப்பீட்டு உரிமையாளரின் வாரிசு, நிர்வாகி அல்லது செயற்படுத்துநர்) காப்பீட்டு திட்டத்தின் கீழ் நன்மைகளை பெற கோரிக்கை விடுக்கும் நபராக இருக்கலாம்.

**“நிறுவனம்”**

இந்த ஒப்பந்தத்திற்கு உட்பட்ட வகையில் ஆபத்துக்கான காப்புறுதியை மேற்கொள்ளும் அமைப்பு.

**“காப்புறுதி பாதுகாப்பு அல்லது பாதுகாப்பு உரிமை”**

காப்புறுதி செய்தவர் காப்புறுதிப்பத்திரத்தின் நிபந்தனைகள், மட்டுப்படுத்தல்கள், தவிர்ப்புக்கள் என்பனவற்றுக்கு உட்பட்ட வகையில், காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் வழங்கப்படும் நன்மைஃநன்மைகளை பெறுவதற்கான உரிமை.
(01) காப்புறுதிப்பத்திரம் நடைமுறையிலுள்ள காலத்திலும்
(02) எந்தவொரு தனிப்பட்ட நிபந்தனையின் முடிவுத் திகதிக்கு முன்னராகவும்
(03) இந்த அனுகூலத்தை பெறுபவர் காப்புறுதிப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்ட சகல தேவைகளையும் பூர்த்தி செய்து காப்புறுதியினால் பாதுகாக்கப்பட்டவராக இருக்கும் பட்சத்தில் அனுகூலம் வழங்கப்படும்.

**“காப்பீடு அளிக்கப்பட்ட நபர்”**
காப்பீட்டு திட்டத்தின் உரிமையாளர் அல்லது அவருடைய சார்ந்த நபர், அந்த நபருக்கான காப்பீடு காலம் நடைமுறையில் இருக்கும் போது மட்டுமே பொருந்தும்.

Specimen

**“ஆரம்பக் திகதி”**

இந்தக் காப்புறுதி ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட திகதி.

**“உள்ளடக்கத் திகதி உள் திகதி”**

புதிதாகப் பிறந்த குழந்தை, புதிதாக தத்தெடுத்த குழந்தை, புதிதாக திருமணமான வாழ்க்கைத்துணைக்கான (வாழ்க்கைத் துணையின் குழந்தைகள் உட்பட) காப்புறுதிப் பாதுகாப்பு ஆரம்பிக்கும் தினம்.

**“காப்புறுதிப்பத்திரத்தின் திகதி”**

விண்ணப்பதாரர் ஒருவர் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் காப்புறுதிப்பத்திர உரிமையாளர் அல்லது அவரில் தங்கியிருப்பவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட தினம்.

**“தங்கியிருப்பவர்”**

காப்புறுதி உரிமையாளரின் சட்டபூர்வமாக விவாகம் செய்த வாழ்க்கைத்துணை (02) காப்புறுதி உரிமையாளரின் அல்லது வாழ்க்கைத்துணையின் விவாகமாகாத தங்கியிருக்கும் 06 மாதத்துக்கு மேல் வயதுடைய பிள்ளை - (சொந்தக் குழந்தை, கணவன் அல்லது மனைவியின் வேறு தாரக்குழந்தை, சட்டபூர்வமாக தத்தெடுத்த குழந்தையும் அடங்கும்). வேறு ஒழுங்குகளை நிறுவனம் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், வாழ்க்கைத்துணை அல்லது விவாகமாகாத தங்கியிருக்கும் பிள்ளையின் வதிவிடம் காப்புறுதி உரிமையாளரது வதிவிடமாக இருத்தல் அவசியம். என்பதற்கான வரைவிலக்கணம் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் மட்டுப்படுத்தல்களுக்கும் உட்பட்டதாகும். என்ற சொல் 18 வயதுக்கு மேற்பட்ட விவாகமாகாத தங்கியிருக்கும் பிள்ளையை உள்ளடக்கமாட்டாது.

**“திருத்தம்”**
இந்தக் காப்பீட்டு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாற்றங்கள் (இருந்தால்), காப்பீட்டு திட்டத்தில் உள்ள விதிமுறைகள் அல்லது நிபந்தனைகளை மாற்றும் அல்லது திருத்தும் வகையில் இருக்கும்.

**“முடிவுத் தேதி”**
காப்பீட்டின் கீழ் வழங்கப்படும் பாதுகாப்பும் நன்மைகளும் நிறைவடையும் தேதி.

**“தவிர்ப்புக்கள்”**

இந்தக் காப்புறுதிப் பாதுகாப்பில் இருந்து தவிர்க்கப்பட்ட அனுகூலங்களும் சேவைகளும். காப்புறுதிப் பாதுகாப்புக்கு உட்பட்ட சகலருக்கும் பொருந்தும்.

**“சலுகைக்காலம்”**

காப்புறுதிப்பத்திரம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் மாதாந்த கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டியிருந்து, செலுத்தப்படாமலுள்ள காலப்பகுதி. இந்தச் சலுகைக்காலத்தின் போது மாதாந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டால், அது, உரிய நேரத்தில் செலுத்தப்பட்டதாகக் கருதப்படும்.

**“மொத்தப் பணம்”**

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட அனுகூலம் தொடர்பாக வழங்கப்படும் மொத்தப் பணம்.

**“ஓரளவு மற்றும் நிரந்தர அங்கவீனம்”**

ஏனைய சகல காரணிகளில் இருந்து வேறுபட்டு, தனித்துவமாக, நேரடியாக, கடுமையான, கண்ணால் பார்க்கக்கூடிய வெளிப்புற வழிமுறைகள் மூலம் ஏற்படும் விபத்தின் காரணமாக உடலின் குறிப்பிட்ட சில உறுப்புக்களின் இயலாத் தன்மையால் தனி நபர் ஒருவர் பாதிக்கப்படுமிடத்து அது ஓரளவு வலது குறைவாகும்.

Specimen

**“காப்பீடு செய்யப்பட்ட நபர்”**

இந்தக் காப்பீட்டின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட நபராகக் காப்பீட்டு அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்ட நபர். குறிப்பாக யாரும் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால், அது காப்பீட்டு வைத்தியாளரை குறிக்கும்.

**“பெயரிடப்பட்ட நபர்”**

காப்பீட்டு வைத்தியாளர் எழுத்து மூலம் பெயர் குறிப்பிடும் மற்றும் நிறுவனம் அங்கீகரிக்கும் நபர், மற்றும் காப்பீடு செய்யப்பட்ட நபர் (Life Assured) இறந்தால் நன்மையை பெற உரிமை கொண்டவர். இத்தகைய பெயரிடல், காப்பீட்டு தொழில் ஒழுங்குமுறைச் சட்டம் எண் 43 of 2000 (RII Act) இன் பிரிவு 43 மற்றும் சிவில் வழக்காடல் சட்டம் (CPC) பிரிவு 544 இன் விதிகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

**“உறுதி செய்யப்பட்ட வாழ்க்கை”**

இந்தக் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாழ்க்கை யாரெனக் குறிப்பிடப்பட்டுள்ள நபர். யாரும் குறிப்பாக பெயரிடப்படவில்லை என்றால், அது காப்பீட்டு உரிமையாளரை குறிக்கும்.

**“காப்புறுதிப் பத்திரம்”**

காப்புறுதி ஒப்பந்தத்தினது ஒழுங்கமைப்பு நிபந்தனைகளை கொண்ட ஒரு ஆவணம். காப்புறுதிப்பத்திரத்தின் முக்கிய அம்சங்களாவன: மாதாந்தக் கொடுப்பனவு அட்டவணை உட்பட காப்புறுதியின் நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும், விண்ணப்பப்படிவம், முக்கியமான நிபந்தனைகள், சத்திர சிகிச்சை அட்டவணை, அபாயத்தை விபரிக்கும் காப்புறுதிச் சான்றிதழ், அதனை பூர்த்தி செய்ய அல்லது மாற்றுவதற்கான திருத்தங்கள்.

**“காப்புறுதிப்பத்திர உரிமையாளர்”**

காப்புறுதி செய்யப்பட்டவரால் மாத்திரம் இயற்கையாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய கடமைகள் தவிர்ந்த காப்புறுதி தொடர்பான ஏனைய கடமைகள் பொருந்தியவரான காப்புறுதி கோரி அதனை பெறும் வழமையான நபர் ஒருவர்.

**“காப்புறுதிப்பத்திர வருட நிறைவு”**

காப்புறுதிப்பத்திர ஆரம்பத் திகதியைத் தொடர்ந்து பொருத்தமான மாதாந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதன் மூலம் வரும் வருட நிறைவு தினம்.

**“காப்புறுதிப்பத்திர காலம்”**

காப்புறுதிப் பத்திர ஆரம்பத் திகதியில் இருந்து தொடங்கும் காலப்பகுதி

**“முன்கூட்டியே இருந்த நிலைமை”**

காப்புறுதிப் பாதுகாப்புக்கு முன்னர் ஏதாவதொரு கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட, வைத்தியச் சிகிச்சை அல்லது ஆலோசனை பெறப்படாவிட்டாலும், சுகவீனம், நோவுகள் போன்ற மருத்துவம் தொடர்பான நிலைமைகள் முன்கூட்டியே இருந்ததாகக் கருதப்படும். காப்புறுதி உரிமையாளர் அல்லது அவரில் தங்கியிருப்பவர் தெரிந்திருந்து அல்லது தெரிந்திருக்கலாமென நியாயமான அடிப்படையில் கருத முடியுமானால், அதுவும் முன்கூட்டியே இருந்த நிலைமையாகக் கருதப்படும். விண்ணப்பப்பத்திரத்தில் கைச்சாத்திட்ட காலத்திற்கும், காப்புறுதி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக நிறுவனம் உறுதிப்படுத்திய காலத்திற்கும் இடையில் ஏற்படும் நிலைமைகளும் முன்கூட்டியே இருந்த நிலைமை எனக்கருதப்படும்.

**“கட்டுப்பணம்”**

காப்புறுதி செய்த ஒவ்வொரு நபர் சம்பந்தமாகவும் காப்புறுதிப்பத்திர நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் இடம்பெறும் கால அடிப்படையிலான கொடுப்பனவு.

Specimen

**“காப்பீட்டின் பத்திரம்”**

காப்பீட்டின் ஆதாரமாக நிறுவனத்தால் வழங்கப்படும் காப்பீட்டு ஆவணத்தின் ஒரு பகுதியாகும்.

**“காப்புறுதி தொகை”**

இது மரணம், மாற்றுத் திறனிழப்பு, தீவிர நோய், அறுவை சிகிச்சை போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தால் வழங்கப்படும் அதிகபட்ச தொகையாகும்.

**“காப்பீட்டு காலம்”**

காப்பீடு வழங்கப்படும் காலப்பகுத

**“காப்புறுதி தொகை”**

இது மரணம், மாற்றுத் திறனிழப்பு, தீவிர நோய், அறுவை சிகிச்சை போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தால் வழங்கப்படும் அதிகபட்ச தொகையாகும்.

**“காப்புறுதித் தொகைகாப்தொகை”**

அங்கவீனம், கடும் சுகயீனம் சத்திரசிகிச்சை போன்ற சம்பவங்கள் தொடர்பாக வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய தொகை.

**“காத்திருக்கும் காலம்”**

புதிதாக காப்புறுதி செய்த நபரினது/காப்புறுதிப் பத்திரத்தினால் உள்ளடக்கப்படாத விசேட மருத்துவ நிலைமை அல்லது சிகிச்சை முறை அடங்கிய காப்புறுதிப்பத்திர ஆரம்பத்திகதி அல்லது விண்ணப்பம் பதிவு செய்த திகதியில் இருந்து ஆரம்பிக்கும் காலம்.

Specimen

இணைப்பு 1 - கைதுறப்பு பெறுமதி

ஒப்புதல் கைதுறப்பு பெறுமதி கணக்கீட்டிற்கான விரிவான விளக்கத்திற்காக கொள்கை ஆவணத்தின் விதிமுறைகள் பிரிவு 2.7-ல் உள்ள விவரங்களைப் பார்க்கவும்.

| Policy Year | Surrender charge |
|---|---|
| 1 | 100% |
| 2 | 100% |
| 3 | 100% |
| 4 | 10% |
| 5 | 6% |
| 6 | 4% |
| 7 | 3% |
| 8 | 2% |
| 9 | 1% |
| 10 - 30 | 0% |

Specimen

**Annexure II**

**A 67/70 இறுதி மரண விகிதங்கள் (A 67/70 Ultimate Mortality Rates)**

| Age | q x | Age | q x | Age | q x |
|---|---|---|---|---|---|
| 0 | 0.00073 | 38 | 0.00115 | 76 | 0.06819 |
| 1 | 0.00068 | 39 | 0.00129 | 77 | 0.07458 |
| 2 | 0.00063 | 40 | 0.00144 | 78 | 0.08150 |
| 3 | 0.00058 | 41 | 0.00162 | 79 | 0.08897 |
| 4 | 0.00053 | 42 | 0.00183 | 80 | 0.09703 |
| 5 | 0.00049 | 43 | 0.00207 | 81 | 0.10571 |
| 6 | 0.00045 | 44 | 0.00234 | 82 | 0.11504 |
| 7 | 0.00042 | 45 | 0.00264 | 83 | 0.12506 |
| 8 | 0.00040 | 46 | 0.00298 | 84 | 0.13580 |
| 9 | 0.00038 | 47 | 0.00336 | 85 | 0.14727 |
| 10 | 0.00037 | 48 | 0.00378 | 86 | 0.15952 |
| 11 | 0.00037 | 49 | 0.00426 | 87 | 0.17255 |
| 12 | 0.00037 | 50 | 0.00479 | 88 | 0.18638 |
| 13 | 0.00040 | 51 | 0.00538 | 89 | 0.20104 |
| 14 | 0.00047 | 52 | 0.00603 | 90 | 0.21651 |
| 15 | 0.00061 | 53 | 0.00675 | 91 | 0.23281 |
| 16 | 0.00081 | 54 | 0.00756 | 92 | 0.24992 |
| 17 | 0.00106 | 55 | 0.00844 | 93 | 0.26783 |
| 18 | 0.00100 | 56 | 0.00942 | 94 | 0.28651 |
| 19 | 0.00094 | 57 | 0.01050 | 95 | 0.30593 |
| 20 | 0.00089 | 58 | 0.01169 | 96 | 0.32605 |
| 21 | 0.00084 | 59 | 0.01299 | 97 | 0.34680 |
| 22 | 0.00080 | 60 | 0.01443 | 98 | 0.36815 |
| 23 | 0.00076 | 61 | 0.01601 | 99 | 0.39000 |
| 24 | 0.00072 | 62 | 0.01775 | 100 | 0.41229 |
| 25 | 0.00069 | 63 | 0.01965 | 101 | 0.43493 |
| 26 | 0.00067 | 64 | 0.02174 | 102 | 0.45783 |
| 27 | 0.00066 | 65 | 0.02403 | 103 | 0.48090 |
| 28 | 0.00065 | 66 | 0.02654 | 104 | 0.50403 |
| 29 | 0.00065 | 67 | 0.02927 | 105 | 0.52714 |
| 30 | 0.00065 | 68 | 0.03227 | 106 | 0.55012 |
| 31 | 0.00067 | 69 | 0.03554 | 107 | 0.57289 |
| 32 | 0.00070 | 70 | 0.03911 | 108 | 0.59534 |
| 33 | 0.00074 | 71 | 0.04300 | 109 | 0.61738 |
| 34 | 0.00079 | 72 | 0.04723 | 110 | 0.63895 |
| 35 | 0.00086 | 73 | 0.05184 | 111 | 1.00000 |
| 36 | 0.00094 | 74 | 0.05685 | | |
| 37 | 0.00103 | 75 | 0.06229 | | |

Specimen

முதன்மை நன்மை/அடிப்படை உத்தரவாத தொகையின் கீழ் வழங்கப்படும் உயிர் காப்பீட்டிற்கான ஆபத்து பிரீமியம், முதல் அட்டவணையின் பகுதி II-இல் குறிப்பிடப்பட்டுள்ள யு67/70 இறுதி மரண விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு, தற்போதைய பிறந்த நாளை நெருங்கிய வயதுடன் கூடுதலாக 5 ஆண்டுகள் சேர்த்து கணக்கிடப்படுகிறது.